**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.98/2009**

நாள்: 07.07.2026.

பெயர்: பாலசுப்ரமணியன் (பி.வா.சா.1) த/பெ: வேலாயுதம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>**

1) தாவா சொத்தின் புல வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அய்யாக்கண்ணு மற்றும் குப்புசாமி ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை மேல்புற சொத்து குப்புசாமிக்கும், கீழ்புற சொத்து அய்யாக்கண்ணுவிற்கும் என்று பிரித்துக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையின் போது முன்புறம் வீடாகவும், பின்புறம் தோட்டமாகவும் இருந்தது என்றால் சரிதான். குப்புசாமி, அய்யாக்கண்ணு ஆகியோர் தங்கள் வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்திற்கு தனியாக பாதை வைத்து தான் சென்று வந்தனர் என்றால் சரியல்ல, அவரவர் வீட்டின் வழியாகவே தோட்டத்திற்கு சென்று வந்தனர். பாகம் பிரித்த சொத்துக்களின் அளவு என்ன என்றால் எனக்கு தெரியாது. பாகம் பிரிந்த சமயத்தில் சுத்துக்கட்டு வீடாக தான் இருந்தது என்றால் சரியல்ல, தனித்தனியாக தான் இருந்தது.

2) வாதி கோரியுள்ள பாதையின் அளவு எவ்வளவு என்றால் அந்த இடத்தில் பாதையே இல்லை. அய்யாக்கண்ணுவிற்கு எத்தனை மகன்கள் என்றால் தெரியாது. அவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தாத்தாவின் தாத்தா ஆவார். ஆதிமூலத்தின் மகன் தான் வாதி சதாசிவம் என்றால் சரிதான். அய்யாக்கண்ணு மகன் களியன், பொன்னுசாமி மகன் பூராசாமி ஆகியோர் அவர்களது பாகத்தை வாதியின் தந்தை ஆதிமூலத்திற்கு கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். அய்யாக்கண்ணுவின் சகோதரர் தான் குப்புசாமி என்றால் சரிதான். குப்புசாமியின் மகன் அப்பாசாமி என்றால் சரிதான். அப்பாசாமி எனது தாத்தா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இடதுபுறம் உள்ள வெள்ளை நிற மாடி வீடு என்னுடையது என்றாலும், வலது புறமுள்ள ஓட்டு வீடு வாதியுடையது என்றாலும் சரிதான், இரண்டு வீட்டிற்கும் இடையே உள்ள பாதை பின்புறமுள்ள தோட்டத்திற்கு செல்கிறது என்றால் சரிதான், அந்த பாதை எங்கள் சொத்தில் அடங்குகிறது. இரண்டு

வீட்டிற்கும் இடையே உள்ள சந்து தான் தாவா சொத்து என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் தாவா சொத்தில் தண்ணீர் பைப் முன்புறமிருந்து பின்புறம் வரை செல்கிறது என்றால் சரியல்ல, முன்புறம் மட்டும் தான் உள்ளது, அது எங்களுடையது.

3) தாவா சொத்தான பாதைக்கு மேல்புறம் எங்களுக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான், தாவா பாதையும் எங்கள் சொத்து தான். தாவா சொத்து பூஸ்துதியில் பாதையாக தான் பயன்படுத்தி வரப்படுகிறது என்றால் சரிதான், குப்புசாமி வகையறாவான நாங்கள் மட்டும் தான் பாதையாக பயன்படுத்தி வருகிறோம். எதிர்வழக்குரையில் வாதி அவரது வீட்டின் மேல்புற சுவற்றில் மேலபுறமாக 1.5 அடி வாரம் நீட்டி கட்டியுள்ளார் என்று கூறியுள்ளோம் என்றால் இல்லை சுமார் ½ அடி மட்டும் தான் வாரம் உள்ளதாக கூறியுள்ளோம். நாங்கள் எதிர்வழக்குரையில் கூறுயது போல் வாதி வீட்டின் மேல்புறம் வாரம் 1.5 அடி நீட்டி கட்டவில்லை என்றும், அவ்வாறு அவர் நீட்டி கட்டியுள்ளதாக தவறாக கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் அளந்து பார்வையிட்டால் தாவா சொத்தை வாதி அனுபவம் செய்து வருவது தெரியும் என்றால் சரியல்ல.

4) 2008 ல் தனபாக்கியம் மகன் ஜெகந்நாதன் வாதிக்கு கிரையம் கொடுக்கும் போது அதன் நான்கெல்லையில் மேல்புறம் பாதை என்று காட்டி தான் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஜெகந்நாதன் மகன் கலியன் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது பங்காளி ஆவார். வாதி கிரையம் பெறும் போதே கிரைய சொத்திலிருந்த வீடு 60 வருடம் பழமையானது என்றால் 100 வருடம் பழமையானது. நானும், என்னுடைய தந்தை மற்றும் தாத்தா, வாதியின் தாத்தா பாகம் பிரித்த காலத்திலிருந்தே தாவா சொத்து பாதையாக தான் பயன்படுத்தி வரப்படுகிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்தம் ஏற்பட்டதற்கு பின்னர் தான் வாதி வா.சா.ஆ. 4, 5 கிரையங்கள் வாங்கினார் என்பதால் அந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கான அவசியமே இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 வாதி எழுதிக்கொடுத்தது இல்லை என்றாலும், நான் எனக்கு வேண்டிய நபர்களுடன் சேர்ந்து ஜோடித்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 முத்திரை தாளில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் நில அளவையர் இருந்து

பஞ்சாயத்து தீர்த்துக்கொண்டோம் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது, பி.வா.சா.ஆ.3 ல் நில அளவையர் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 முத்திரை தாளில் எழுதப்படாத காரணத்தினால், அதற்கு Stamp Duty penalty கட்டவில்லை என்பதால், அதனை குறியீடு செய்திருந்தாலும், அதற்கு எவ்வித சாட்சிய மதிப்பும் இல்லை என்றால் சரியல்ல.

5) தாவா சொத்து ரெவென்யூ ஆதரவுகளில் பாதை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறாக காட்டப்பட்டுள்ளது. ரெவென்யூ மற்றும் பூஸ்துதியில் பாதையாக வாதி பயன்படுத்தி வருவதை எங்களுக்கு மட்டும் பாத்தியம் என வாதியை தடுக்க எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வழியாக தான் வாதியும், அவரது மூதாதயர்களும் பல பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக பாதையாக பயன்படுத்தி வருவதால் வாதிக்கு தாவா சொத்தில் பாதை உரிமை உண்டு என்றாலும், அதனை தடுக்க எங்களுக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்த எதிர்பாத்திய கோரிக்கையை நாங்கள் என்ன காரணத்திற்காக திரும்ப பெற்றுக்கொண்டோம் என்றால் நாங்கள் திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை. வாதி எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யாத காரணத்தினால் தான் எதிர்பாத்தியக் கோரிக்கையை திரும்ப பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/வே.பாலசுப்ரமணியன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.